மேற்கொள்ளப்பட்டு தொட்டிகள் சீரமைக்கப்பட்டன. அந்த மக்களுக்கு வீட்டோடு சேர்த்து மீதமுள்ள தொட்டிகளையும் சீரமைத்து, மீன் குஞ்சுகளை விடுவதற்குத் தேவையான வசதிகளையும் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலமாகக் கேட்டு அமருகிறேன்.

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாம் முறையாக தமிழகத்தின் முதல்வராக இருந்தபோது, சுனாமி பேரிடர் காலத்திலே, சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் வீடு கட்டிக்கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமூர்த்தி நகரிலும், அமராவதி நகரிலும் 20 மீனவ குடும்பங்கள்தான் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். அவர்கள் பட்டாவுடன் சேர்த்து விண்ணப்பித்தால், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும். அத்துடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலை பழுதுபார்க்கும் கூடம் ஒன்று கட்டித்தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

தார்ச் சாலை

***17420—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 பிப்ரவரி 1

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, கோபனாரி பகுதியிலுள்ள மூணுகுட்டை மற்றும் அரக்கடவு கிராமங்களுக்கு தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, கோபனாரி பகுதியிலுள்ள மூணுகுட்டை மற்றும் அரக்கடவு கிராமங்களிலுள்ள மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளர்வறியாத துணிவும், அசையா உறுதியும், திடமான முடிவும், தீர்க்கமான நடவடிக்கையும், தன்னிகரில்லாத தலைமைப் பண்பும் கொண்டு தமிழக மக்களைக் காத்துவரும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட கோபனாரியிலிருந்து அரக்கடவு வரை செல்கிற சாலை, மலைப்பகுதியிலே அமைந்திருக்கின்ற சாலை. இந்தச் சாலை சுமார் 8 கி.மீ. நீளமுள்ளது. இந்தச் சாலை மண் சாலையாக இருக்கிறது. அங்கே வாழ்கிற மக்கள் வசதியில்லாதவர்கள். நடந்து செல்கிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். கடந்த காலங்களில் இந்தச் சாலையை மேம்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னபோது, வனத் துறையினுடைய அனுமதி பெறாமல் செய்ய முடியாது என்று சொல்லி, காலம் தாழ்த்தப்பட்டது. அந்த நிலைமை இன்றும் தொடர்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வனத் துறையின் அனுமதியைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொண்டு, வருகிற நிதியாண்டிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2014 பிப்ரவரி 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, தோலம்பாளையம், கோபனாரி சாலையிலிருந்து பிரிந்து செல்லும் அரக்கடவு மண் சாலையின் நீளம் 5 கி.மீ., அகலம் 3.5 மீட்டராகும். இதே சாலையில் மூணுகுட்டைப் பிரிவிலிருந்து மூணுகுட்டைக்குச் செல்லும் மண் சாலையினுடைய நீளம் 2 கி.மீ., அகலம் 3.5 மீட்டராகும். சாலையின் மொத்த நீளம் 7 கி.மீ., மொத்தப் பரப்பு 2.45 ஹெக்டேராகும். மேற்காணும் சாலை கோபனாரி காப்புக் காட்டின் வழியே செல்கின்றது. இக்காப்புக் காட்டு சாலைக்கு வழி உரிமை ஏதும் வழங்கப்படவில்லை. மேற்படி சாலையின் மொத்தப் பரப்பு 2.45 ஹெக்டேர் என்பதால் இச்சாலையை பழங்குடியினர் மற்றும் இதர மரபு வன வாழ்வினர் வன உரிமைகள் அங்கீகரித்தல் சட்டம், 2006—ன்படி பரிசீலிக்க இயலாது. மேற்படி சாலைகள் அமைந்துள்ள காப்புக் காடு, மரங்கள் அடர்ந்த வனப் பகுதியாகும். அதிக எண்ணிக்கையில் யானை, மான், காட்டெருமை மற்றும் இதர வன உயிரினங்கள் உள்ளதால், இந்தப் பகுதியில் தார்ச் சாலை அமைக்கப்பட்டால், வன உயிரினங்களின் இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மேற்காணும் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற இயலாது என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்திருக்கிற ஒரு தொகுதி. அங்கு ஏறத்தாழ 50—க்கும் மேற்பட்ட குக்கிராமங்களில் வாழ்கிற ஆதிவாசி மக்கள் செல்வதற்கு சாலை வசதி இல்லாமையால், 7 கி.மீ. அல்லது 8 கி.மீ. தூரம் மண் சாலையில் நடந்து செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மேட்டுப்பாளையத்திலிருந்து பில்லூர் அணைக்குச் செல்வதற்கு தற்போது 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. மேட்டுப்பாளையத்திலிருந்து

பில்லூர் அணைக்குச் செல்வதற்கு மலைப் பகுதியின் வழியாக மண் சாலை ஒன்று உள்ளது. அந்த மண் சாலை சுமார் 9 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. ஆகவே, 9 கிலோ மீட்டர் நீளமுள்ள அந்தச் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தருகிறபட்சத்தில், பில்லூர் அணையைச் சுற்றி இருக்கின்ற 30—க்கும் மேற்பட்ட ஆதிவாசி குடும்ப மக்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியில் இருக்கிற ஆதிவாசி மக்களுக்கு நிரந்தரமாக சாலை வசதி ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டுமுதல் பொது மக்களின் பயன்பாட்டில் இருக்கும் வனப் பகுதியிலுள்ள வழித்தடங்களை அதே பரப்பளவில் மேம்படுத்த, முறையான விண்ணப்பம் மாவட்ட வன அலுவலரிடம் சமர்ப்பித்தால், அதனை மத்திய அரசுக்கு அனுப்பி, அனுமதியைப் பெற்று, மேம்பாட்டுப் பணிகள் செய்திட, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 வழிவகை செய்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மத்திய அரசின் அனுமதி பெற உரிய விண்ணப்பத்தினை மாவட்ட வன அலுவலரிடம் சமர்ப்பித்தால், அதைப் பரிசீலனை செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான ஆணையைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.